1974 சனவரி 21]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ): இப்பயிற்சி காரைக்குடி அழகப்பா செட்டியார் பொறியியல் கல்லூரியில் மட்டும் இவ்வாண்டு 1—12—1973 முதல் நடத்தப் படுகிறது. ஐந்து மாணவர்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். பயிற்சிக் காலம் ஓராண்டாகும். வகுப்புகள் 1—12—1973-ல் தொடங்கப்பட்டிருக்கின்றன.

THIRU N. DENNIS: Sir, may I know whether it will be extended to other Engineering Colleges and also whether any practical training is given to the students who take this course?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இதை அங்கே ஆரம்பிப்பதற்குக் காரணம் 'நாஷனல் லாபரேட்டரி'—தேசிய ஆராய்ச்சிக் கூடம்—இந்திய சர்க்காரின் சார்பாக அமைந்திருப்பதுதான். அது அங்கே அமைந்திருப் பதால் தான் காரைக்குடி பொறியியல் கல்லூரியிலே இப்பிரிவை ஆரம்பிப்பது பொருத்தம் என்று துவங்கப்பட்டிருக்கிறது. ஐந்து என்பதை மேன்மேலும் உயர்த்துவதுபற்றி ஆராயலாம். தேவை ஏற்படுமொனால், வேறுபல கல்லூரிகளிலும் ஆரம்பிக்க இயலுமா என்பதுபற்றி கவனிக்கலாம்.

Grants to Guru Nanak Bhavan

* 34 Q.—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(a) whether the State Government have sanctioned any grant to the Guru Nanak Bhavan in Madras; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ): ஆம். குருநானக் பவன் சென்னையில் நிறுவ குருநானக் பவன் நிறுவனத்திற்கு மூன்று லட்சம் ரூபாய் மான்யமளித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது இப்பவன் கட்டுவதற்கான மைய அரசின் பங்கையும் சேர்த்து இவ்வரசு கொடுக்க இருக்கும் ரூபாய் 5 லட்சம் மான்யத்தின் முதல் தவணையாகும்.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவர் அவர்களே, தமிழகத்திலே மற்ற இன மக்களுக்கு அவர்களுடைய மனையை கட்டுவதற்கு தமிழக சர்க்கார் தாராளமாக நிதி தந்து கொண்டிருக்கிறது.

வந்தவர்களுக்கு எல்லாம் வாரி வாரி வழங்குகிறது தமிழகம். ஆனால் டெல்லியிலே உள்ள தமிழர்கள் வள்ளுவர் பவனம் என்ற பவனம் கட்ட போதிய நிதி கிடைக்காமையால், மத்திய சர்க்காரிடம் உதவி கேட்டும் அவர்கள் தரவில்லை என்பது உண்மையா? ஆமென்றால், மத்திய சர்க்காரிடம் எடுத்துச்சொல்லி வள்ளுவர் பவனத்திற்கு நிதி பெற நம்முடைய சர்க்கார் முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, டெல்லியிலே அந்த பவனம் அமைக்க மத்திய சர்க்கார் நிதி உதவி கொடுக்க மறுத்தார்களா என்பதுபற்றி விவரக் குறிப்பு என்னிடத்தில் இப்பொழுது இல்லை. தனிக் கேள்விப் போட்டால் அதுபற்றி விவரங்கள் சேகரித்து தரப்படும். அதற்காக, தமிழக அரசின் சார்பாக ஓரளவு நன்கொடை அளிக்கப் பட்டிருக்கிறது. மத்திய அரசிடமிருந்தோ, அல்லது டெல்லியை ஆட்சி புரிகிற அரசிடமிருந்தோ, நன்கொடை பெற்றிருக் கிறார்களா என்று தெரியவில்லை. இந்த குருநானக் பவனத்தைப் பொறுத்து, குருநானக் அவர்களின் 500-வது பிறந்த நாளை ஒட்டி, மத்திய சர்க்காரே ரூ. 3¾ லட்சம் நிதி உதவி செய்துள்ளது. நமது அரசு ரூ. 1¼ லட்சம் தந்தது. அதற்கென்று அமைக்கப்பட்ட குழு தனியாக ரூ. 5 லட்சம் திரட்டி, ஆக, ரூ. 10 லட்சத்திலே பவனத்தைக் கட்டுவதற்கு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. ஆக, நமது தமிழக அரசு ரூ. 1¼ லட்சம் தருகிறது, மத்திய அரசு ரூ. 3¾ லட்சம் தருகிறது. அதிலே ரூ. 3 லட்சம் தரப்பட்டிருக் கிறது.

Chingleput Medical College

* 35 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Medical Council of India have not recognised the Chingleput Medical College; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) : செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரிக்கு ஏற்பு வழங்குதல் சம்பந்தமாக இந்திய மருத்துவ மன்றத்தின் கவனத்திலுள்ளது. ஆய்வில் இன்னும் இருக்கிறது.